2017 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தச் செய்தியெல்லாம் எதில் வந்திருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆதாரம் இருந்தால் கொண்டு வந்து கொடுங்கள். நான் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) கொடுங்கள். அதை நான் என்னவென்று ஆராய்ந்து பார்த்து சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரம் இருந்தால் கொடுங்கள்; நான் அதைப் பரிசீலிக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரமிருந்தால் கொண்டு வந்து கொடுங்கள்; நான் அதைப் பரிசீலிக்கிறேன். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் நீங்கள் பேசக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் அப்படி ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் சொல்கிற டி.வி–யில் வந்த செய்தியில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரே, "அப்படி நான் சொல்லவில்லை" என்று மறுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் அதுசம்பந்தமாக நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறீர்கள். நீதிமன்றத்தில் முடிவாகி வரட்டும். அதன் பின்னர் நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவ்வளவுதான். இந்தப் பிரச்சினைக்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன். இதற்குமேல் இதுகுறித்து விவாதிக்க நான் விரும்பவில்லை. எனவே, தயவுசெய்து சபையை நடத்த ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடுகள்) நான் அடுத்த நிகழ்ச்சிக்குப் போகிறேன். (குறுக்கீடுகள்)*

4. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன். (குறுக்கீடுகள்)*

1. *திரு. சு. ரவி*
2. *திரு. பி.எம். நரசிம்மன்*
3. *திரு. வி.வி. இராஜன் செல்லப்பா*
4. *திரு. சு. குணசேகரன்*
5. *திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*
6. *திரு.* P. *வெற்றிவேல் (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

முற்பகல் 11—30

இங்கே பாருங்கள். நான் இதையெல்லாம் allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) இவற்றையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. சபையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். அவ்வளவுதான் நான் உங்களிடத்தில் கேட்பேன். இதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று, தொடர்ந்து 'பேசவிடு, பேசவிடு' என்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,